[1978 செப்டம்பர் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது தள்ளுபடியைத் தருவதற்கு இசைவு கொடுத்து, நாமும் வாங்கிக் கொண்டு விநியோகிக்கின்ற நிலையில் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* வினு எண் 136—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

பொது நூலகங்களுக்கு நூல்களைத் தேர்வு செய்ய ஒரு மாநிலக் குழுவை அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசாணை (நிலை) எண். 856, கல்வி, நாள் 11-5-1978ன் படி 1978–1979 ஆம் ஆண்டு மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்கு 25 விழுக்காடு இணை மானியத்தை நூல்களாக வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப் படும் நூல்களைத் தேர்வு செய்ய கல்வி அமைச்சரின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது;

அரசு துணைச் செயலர் (நூலகங்கள்) கல்வித் துறை செயலர் உறுப்பினர்; பொது நூலக இயக்குநர்—உறுப்பினர்; கல்லூரிக் கல்வி இயக்குநர் — உறுப்பினர்; பள்ளிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்: தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்; தமிழ் வளர்ச்சி இயக்குநர்—உறுப்பினர்.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, இத்தகைய நூலகக் குழுக்கள் அமைக்கும்போது, சிறப்பான நூல்களை எழுதி யுள்ள எழுத்தாளர்கள், இலக்கிய அறிஞர்கள் இவர்களுக் கெல்லாம் இந்தக் குழுவில் இடம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது அமைக்கப் பட்டிருக்கின்ற குழுவிலேயே இருக்கின்ற பலரும் இத்தகைய சிறப்பான தகுதியுடையவர் என்று அரசு கருதுகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் ; பொது நூலகங்களுக்கு— பொதுவாக அந்தந்த ஆட்சியிலுள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நூல்கள் தினசரிகள் வைக்கப்பட்டு வந்ததாகத் தெரி கிறது. அதைப் போக்கி சர்வ கட்சியினரும் சேர்ந்த முக்கியஸ் தர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தக் குழு எந்தக் கட்சியின் அடிப்படையிலும் அமைக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1978 செப்டம்பர் 11]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் நோக்கத்தோடு சில பத்திரிகைகள் பொது நூலகங்களில் போடலாம், அல்லது போடப்படலாம் என்ற முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கையாளப்பட்டு வந்தது. இதன் காரணமாக ஜனசக்தி, தாமரை போன்ற பத்திரிகைகள் நிறுத்தப்பட்டு வந்தன. ஆகவே இந்த அரசு இதை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த செய்தித் தாட்களும் பொது நூலகங்களில் போடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நிச்சயமாக முன் வரும என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில குழுவைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போல் மாவட்ட மத்திய நூலகக் குழுக்கள் இயங்கி வருகின்றவா? இயங்கவில்லை என்றால், இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதுபற்றி ஒரு குழுவின் அறிக்கை தரப்பட்டு ஆலோசனை முடிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் இதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக் கட்டிடம்.

* வினா எண் 137— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக்குறிச்சி பஞ்சாயத்தில் உள்ள ராஜாஸ்கட்டளை கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிடம் அடிமட்டம் போடப்பட்டும் நீண்ட நாளாக முடியாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இந்த கிராமத்தில் பள்ளிக்கூட கட்டிட வேலை நடைபெறவே இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊருக்கு நானே சென்றிருந்தேன். என் தொகுதியிலே இருக்கிற ஊர். அங்கே பள்ளிக்கூடம் கட்டப்பட்டு, பேஸ்மெண்ட் மட்டும் போடப்பட்டிருந்தது. அதை வைத்துதான் வேலைகள்